உ
சிவமயம்



ஏழாலை — இலந்தைகட்டி

# பாதாள ஞானவைரவர் கோவில்

# திருவூஞ்சல் பாமாலை

ஆத்மஜோதிப் பிரசுரம்
நாவலப்பிட்டி
1981

உ
சிவமயம்

# ஏழாலை கிழக்கு இலந்தைகட்டி பாதாள ஞானவைரவர் கோவில்

ஏழாலை கிழக்கைச் சேர்ந்தது இலந்தைகட்டி என்றொரு குறிச்சி. ஒரு காலத்தில் இலந்தை மரங்கள் ஏராளமாக நின்றன. அவை காடுபோல் காட்சி அளித்தனவாகையால் இலந்தைக்காடு என்ற பெயரைப் பெற்று காலகதியில் அப்பெயர் இலந்தைகட்டி ஆயிற்று.

இலந்தை கட்டியில் ஒருமுறை ஒரு பெரியவர் தமது காணியில் கிணறு ஒன்று தோண்டினார். தோண்டும்போது கற்பாறை தோன்றுவதற்கு முன்பு கணீர் என்றொரு சத்தம் கேட்டது. மண்ணைக் கிளறிப் பார்த்த போது ஒரு சூலம் தென்பட்டது. அதனை எடுத்து கிணற்றுக்குப் பக்கத்தில் நின்ற இலந்தை மரத்துக்குக் கீழ் ஊன்றி வெள்ளி செவ்வாய்க்கிழமைகளில் விளக்கேற்றி வழிபாடு ஆற்றி வந்தனர். கிணறு தோண்டும் போது மண்ணுள் புதையுண்டிருந்தபடியினால் பாதாள ஞானவைரவர் என்று அழைக்கப்பட்டார்.

இலந்தை மரம் சில காலத்தில் பட்டுப்போனது. அந்த இடத்தில் ஒரு குடிசை அமைத்து வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் வழிபாடு ஆற்றிவந்தனர். வருடத்தில் மூன்று முறை பொங்கல் செய்தனர். தைப்பொங்கல் அன்று மாலை, வருடப்பிறப்பு அன்று மாலை, ஆடி அமாவாசைக்கு அடுத்து வரும் சனிக்கிழமை அதிகாலை, இந்த நாளில் பலகாரமடைகளும், பழமடைகளும் மிகப் பெரிதாகப் போடுவது வழக்கம். பொங்கலுக்கு மூன்று தினங்களுக்கு முன்பு விசேட அபிடேகம் திருவிழாச் செய்தே வருடாந்தப் பொங்கல் நடைபெற்று வந்தது.

தற்போது பத்து அலங்காரத் திருவிழாச் செய்து கடைசி நாளன்று பொங்கல் வைப்பர். சித்திராபூரணையில் அன்றைக்கு சித்திரபுத்திர நாயனார் கதை படித்து விசேட அபிஷேகம் செய்து கஞ்சி காய்ச்சி ஊற்றும் வழக்கம் இன்றும் உண்டு.

வைரவமூர்த்தம் சிவமூர்த்தங்களுள் ஒன்றாகும். பெரும் பயங்கரமான தோற்றம் வாய்ந்த உருவம் இது என்பதை இப்பெயரே விளங்க வைக்கின்றது. கருணைவடிவான இறைவன் பயங்கரமான கோலம் கொண்ட தருணங்களும் உண்டு. பிரமனைத் தண்டிப்பதற்காகச் சிவன் கொண்ட கோலமே இது. பிரமன் ஐந்து முகங்களுடன் விளங்கிய காலத்தில் பரமன் போன்று தானும் ஒரே தோற்றத்தினன் எனத் தன்னை அவனுடன் சம நிலையில் வைத்து இறுமாந்தனன். இவனது இறுமாப்பை அடக்கச் சிவன் உக்கிர தோற்றங் கொண்டு தன் நகத்தினால் உச்சியில் உள்ள தலையினைக் கொய்த பொழுது பிரமன் நான்முகன் ஆயினான். இக்கருத்தமைந்த வைரவக் கடவுளைப் பற்றிய துதிப்பாடல்கள் இரண்டு கந்தபுராணக் கடவுள் வாழ்த்தில் காணப்படுகின்றன.

"பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்."

"வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென வால மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம்."

இவரை வழிபடுவோர் அதாவது உபாசனாமூர்த்தியாகக் கொள்வோர் பைரவர் எனப்பெறுவர். இவர் வீற்றிருப்பது பைரவ புவனம். இவர் தோற்றம் நீலநிறம்:

திருவடிகளிற் சிலம்பு, மார்பில் தலைமாலை, கைகளிற் சூலம், முருகப்பெருமானுக்கு வேல் எப்படியோ, இவ ருக்கு சூலம் அப்படி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மழு, பாசம், உடுக்கை, முக்கண்கள், கோரப்பற்கள், செஞ்சடை சீற்றநகை கொண்டமுகம் ஆகிய இத்தனையும் உண்டு.

வைரவக்கடவுள் ஊழியிறுதியில் சிவபெருமான் ஆணை யால் யாவற்றையும் அழிப்பார். இவருக்கு நான்மறையே நாய்வடிவுடன் வாகனமாக இருக்கிறது. பைரவ சமயம், சைவசமயம் ஆறினுள் ஒன்று என்று கந்தபுராணம் கூறு கின்றது.

ஆடையெதுவு மற்ற நிலையிலேயே இவர் பெரும் பாலும் சித்திரிக்கப்படுவர். அறுபத்து நான்கு வேறு பட்ட நிலைகளில் வைரவரை உருவாக்குவார்கள். இவ் வறுபத்து நான்கு வேறுபாடுகளும் வைரவரின் எட்டு அடிப்படையான தோற்றங்களின் விரிவு. இவ்வெட்டு வகை மூல வைரவர்கள் அசிதாங்க வைரவர், குருவைர வர், சண்ட வைரவர், குரோத வைரவர், உன்மத்த வைரவர், கபால வைரவர், பீஷண வைரவர், சம்ஹார வைரவர் என்பவர்களாம்.

வடுக வைரவர், ஸ்வர்ண கர்ஷணவைரவர் என இரு நிலைகளும் உண்டு. வடுக வைரவர் எட்டுக்கையினர். அப யம், கட்வாங்கம், பாசம், சூலம், டமரு, கபாலம், பாம்பு, ஆகியவற்றை இவரது கைகளிற் காணலாம். இவரின் பக்கத்தில் நாய் இடம்பெறும். ஸ்வர்ணகர்ஷண வைர வரை மஞ்சள் உடலினராயும், முக்கண்ணினராயும், நான்கு கரங்களுடன் நிறுவி வழிபடுவர்.

இத்தகைய வைரவப்பெருமான் எல்லா இடங்களிலும் காவல் தெய்வமாகப் போற்றப்படுகின்றார். எல்லாத் திருக்கோயில்களிலும் வைரவப்பெருமானுடைய திரு மூர்த்தம் உண்டு. கோயில் சொத்துக்கள் அனைத்திற்கும்

அவரே அதிகாரி. சுவாமியினுடைய பள்ளியறை பூட்டப் பெற்று பள்ளியறையினுடைய திறப்பு வைரவப்பெருமானிடம் அடைக்கலமாக வைத்துக் கடைசியாக அவருக்குத் தீபாராதனை செய்து வைரவப்பெருமானுடைய திருக்கதவம் தாளிடப்படும். இந்த முறை எல்லாப் பெரிய திருக்கோயில்களிலும் நடைமுறையில் உள்ளது.

புங்குடுதீவைச் சேர்ந்த திரு. சி. க. நாகலிங்கம் ஆசிரியர் அவர்கள் வைரவப் பெருமான்மீது மனமுவந்து பாடியளித்த திருஊஞ்சலை அச்சேற்றி வெளியிடுவதில் ஆத்மஜோதி நிலையத்தினர் பெரிதும் மனம் மகிழுகின்றனர். திருஊஞ்சல் பாடியளித்த ஆசிரியர் அவர்களுக்கு வைரவப்பெருமான் திருவருள் எப்போதும் கிடைக்குமாறு ஏத்துகின்றோம்.

இந்த நூலின் விற்பனையால் வரும் பணம் முழுவதும் கோயில் திருப்பணிக்குரியதாகும். இந்த நூலை விலை கொடுத்து வாங்குவோர் வைரவப்பெருமானுடைய திரு அருளைப் பெற்றுக்கொள்வதோடு திருப்பணிக்கும் உதவி செய்தவர்களாவர்.

இங்ஙனம்
**ஆத்மஜோதி நிலையத்தினர்.**

நாவலப்பிட்டி.
19-6-81.

உ
சிவமயம்

## ஏழாலை கிழக்கு இலந்தைகட்டி பாதாள ஞான வைரவர் கோவில்

# திருவூஞ்சல் பாமாலை

### காப்பு

திருமணக்கும் யாழ்ப்பாண நகரைச் சார்ந்த
சீர்மணக்கும் ஏழாலை கிழக்கில் உள்ள
மருமணக்கும் இலந்தைகட்டி பாதாள ஞான
வயிரவர்மேல் ஊஞ்சலிசை தமிழிற் பாட
குருமணக்கும் பாரதப்போர் பருப்ப தத்தில்
கோடாணி தரித்தெழுதும் தெய்வீகத்தின்
அருண்மணக்கும் கயமுகவன் உபயபாதம்
அகங்கையில் மலர்கொண்டு அருச்சிப்போமே

### நூல்

சீராரும் செம்பவளக் கால்கள் நாட்டி
செப்பரிய வயிரமணி விட்டம் நீட்டி
ஏராரும் தண்டரள வடமும் பூட்டி
இலங்குமெழில் ஆடகப்பொற் பலகை மாட்டி
ஆராரும் விரைமலரின் தவிசிலேறி
அமர்ந்தினிதே ஏழாலை கிழக்கில் மேவும்
வாராரும் இலந்தைகட்டி பாதாள ஞான
வயிரவரே பொன்னூஞ்சல் ஆடி யருளே

சந்திரனார் வெண்கொற்றக் குடையும் தாங்க
தயங்குமொழி சூரியரும் தீபம் ஏந்த
கந்தவர்க்கமொடு தூபம் கனலி போட
காளாஞ்சி இந்திரனார் கரத்தில் பற்ற
சந்தமுள மருத்துவர்சா மரைகள் வீச
சலதரமார் ஏழாலை கிழக்கில் தேவர்
வந்துதொழும் இலந்தைகட்டி பாதாள ஞான
வயிரவரே பொன்னூஞ்சல் ஆடியருளே

விரித்தசெஞ் சடையாட விளங்கு மார்பில்
மிக்கலேயும் அக்குமணி மாலேயாட
தரித்ததிரி சூலமொடு கபால மாட
தழலெனவே வெகுண்டுதிரு மாலின் தோலே
உரித்தகஞ் சுகமாட உலகோர் போற்றும்
ஓங்குபுகழ் ஏழாலே கிழக்கில் மாண்பு
வரித்துயரும் இலந்தைகட்டி பாதாள ஞான
வயிரவரே பொன்னூஞ்சல் ஆடியருளே

சங்கரன்தன் வெகுளிதனில் உதித்துத் தேவர்
சரணெனவே அஞ்சியிருதாளில் வீழ
செங்கனலாய்ச் சிவந்தவிரு கண்ணி னின்று
செம்பொறிகள் பறக்க வெஞ்சினங் கொண்டார்த்து
பங்கயனேர் சிரமறுத்த வீராதெய்வம்
பரித்துயர்ந்த ஏழாலே கிழக்கில் என்றும்
மங்களஞ்சேர் இலந்தைகட்டி பாதாளஞான
வயிரவரே பொன்னூஞ்சல் ஆடியருளே

நந்தீசர் மத்தளமும் நயந்து கொட்ட
நாரதரும் தும்புருவும் வீணே மீட்ட
கந்தருவர் அமிழ்தெனவே கானம்பாட
கடவுளரும் பரவி நின்று தாளம் போட
அந்தணர்கள் இருக்காதி வேதம் ஓத
அணியமர்ந்த ஏழாலே கிழக்கிற் செல்வம்
வந்தணேந்த இலந்தைகட்டி பாதாள ஞான
வயிரவரே பொன்னூஞ்சல் ஆடியருளே

ஆறுறு தத்துவமாய் அப்பாலாகி
அண்டபகிரண்டங்கள் தானேயாகி
ஈருதி இல்லாத பொருளே யாகி
இரவுபக லறநின்ற இன்பே அன்பர்
தேருத பரஞ்சோதி திகழ்ஞா னத்தின்
தெளிவேசீர் ஏழாலே கிழக்கிற் செழுமை
மாருத இலந்தைகட்டி பாதாள ஞான
வயிரவரே பொன்னூஞ்சல் ஆடியருளே

அஞ்சனத்தின் மேனிவண்ணா ஆடீர் ஊஞ்சல்
அயில்சூல வேலவனே ஆடீர் ஊஞ்சல்
வெஞ்சினங்கொள் வயிரவனே ஆடீர் ஊஞ்சல்
வேதாளி நாயகனே ஆடீர் ஊஞ்சல்
சஞ்சலங்கள் தீர்ப்பவனே ஆடீர் ஊஞ்சல்
சதானந்தா ஏழாலை கிழக்கில் மேவும்
மஞ்சுதவழ் இலந்தைகட்டி பாதாள ஞான
வயிரவரே பொன்னூஞ்சல் ஆடியருளே

சத்துருசங் காரகோரா ஆடீர் ஊஞ்சல்
தண்டாயு ததரனே ஆடீர் ஊஞ்சல்
முத்தனேமுக் கண்ணுடையாய் ஆடீர் ஊஞ்சல்
மூவாத முழுமுதலே ஆடீர் ஊஞ்சல்
சித்தனே சிவக்குமாரா ஆடீர் ஊஞ்சல்
திருநின்ற ஏழாலை கிழக்கில் சிறப்பு
வத்திக்கும் இலந்தைகட்டி பாதாள ஞான
வயிரவரே பொன்னூஞ்சல் ஆடியருளே

அடுத்துயர்ந்த பூதகணம் எழுந்து சூழ்ந்து
அட்டதிசை நடுநடுங்க முழங்கி ஆர்ப்ப
இடுக்கணொழி என்றமரர் வானில் ஆர
எழிலொழுகு தேன்மலரின் மாரிதூர்ப்ப
முடுவல்வா கனமேறும் வடுக நாதா
முன்னவனே ஏழாலை கிழக்கில்மேவும்
வடுவில்லா இலந்தைகட்டி பாதாள ஞான
வயிரவரே பொன்னூஞ்சல் ஆடியருளே

துரியம் பேரிகைமுழவம் தக்கைஎக் காளம்
துடிபம்பை வீணை மிருதங்கம் தாளம்
பாரிடங்கள் எடுத்தியம் பிப்பாடியாட
பரவசமாய் முனிக் கணங்கள் ஆசி கூற
வீரியமாய் சத்துருக்கள் உயிரைச்சாடும்
வென்றியனே ஏழாலை கிழக்கில் மேவும்
வாரிவள இலந்தைகட்டி பாதாளஞான
வயிரவரே பொன்னூஞ்சல் ஆடியருளே

வேண்டுபவர் வேண்டுவதை ஈயும் தெய்வம்
விலகாத நோய்துன்பம் விலக்குந் தெய்வம்
காண்டகுநற் துரியாதீதம் கடந்த தெய்வம்
கனவினிலே தேவர்களும் காணாத் தெய்வம்
பூண்டருண்மெய் யடியாரின் புதுமைத் தெய்வம்
புவியிலுயர் ஏழாலை கிழக்கில் மேவும்
மாண்புமிகு இலந்தைகட்டி பாதாளஞான
வயிரவரே பொன்னூஞ்சல் ஆடியருளே

கருங்குதிரை ஏறிவரும் கால காலா
கங்காளா திகம்பரனே ஆடீர் ஊஞ்சல்
வருகின்ற பேய்பில்லி சூனியங்கள்
வாராது காப்பவனே ஆடீர் ஊஞ்சல்
அருக்கனெரி மதிநயன கட்கபாணி
அத்தஞ்சேர் ஏழாலை கிழக்கில் மேவும்
வருக்கைவளர் இலந்தைகட்டி பாதாளஞான
வயிரவரே பொன்னூஞ்சல் ஆடியருளே

பரவொளியே பெருங்கருணைப் படிவமாக
பரனருளே திருக்கரங்கள் பதங்களாக
வரமருள முச்சத்தி சூலங் கொண்டு
வந்துவினை யாடிவரச் சதங்கை கொஞ்ச
சிரந்தனிலே அடியார்கள் கரங்கள் கூப்ப
செம்மை சேர் ஏழாலை கிழக்கில் சூத
மரம் வளரும் இலந்தைகட்டி பாதாள ஞான
வயிரவரே பொன்னூஞ்சல் ஆடியருளே

பரித்ததிரி சூலரத்த கபாலம் தோன்ற
பங்கயனைத் தலை அரிந்த பான்மை தோன்ற
தரித்தபொன் னரைஞாணும் பூணும் தோன்ற
தழற்கொழுந்தாய் வளர்சடையும் படையுந் தோன்ற
தெரித்ததனி நிர்வாணம் ஏணந் தோன்ற
சீர்கிடந்த ஏழாலை கிழக்கில் தர்மம்
வரித்துயரும் இலந்தைகட்டி பாதாளஞான
வயிரவரே பொன்னூஞ்சல் ஆடியருளே

ஆன்வாழி அந்தணர்கள் வாழி என்றும்
அஞ்செழுத்தும் நீறுருத்தி ராக்கம் வாழி
கோன்வாழி வேதாக மங்கள் வாழி
குறையாத திருமுறையும் வாழி விஞ்ச
வான்வாழி மகிதலமும் வாழி மாறு
வளஞ்சுரக்கும் ஏழாலே கிழக்கில் மேய
வான்பொழியும் இலந்தைகட்டி பாதாள ஞான
வயிரவரின் பொற்பதங்கள் வாழி வாழி

## பராக்கு

நெக்குருகு மடியாரின் நிறைவே பராக்கு
நேயமுறு மானந்த நிதியே பராக்கு
உக்கிரப ராக்கிரம வீராபராக்கு
உத்தண்ட பிரசண்ட கோரா பராக்கு
அக்கினிவா கனமேறும் அரசே பராக்கு
அகிலாண்ட நாயகனே ஐயாபராக்கு
மக்கள் தொழும் இலந்தைகட்டி பாதாள ஞான
மகத்துவஞ்சேர் வயிரவரே வடுகா பராக்கு

## லாலி

அக்கினிச் செஞ்சடையனுக்கு லாலி சுப லாலி
அனுதிபூத ராயனுக்கு லாலி சுப லாலி
முக்கண்ணன் பிள்ளைக்கு லாலி சுப லாலி
முடுவற்படை யாளனுக்கு லாலி சுப லாலி
செக்கர்நிறக் கண்ணனுக்கு லாலி சுப லாலி
தெய்வவருள் வரதனுக்கு லாலி சுப லாலி
வக்கணையூர் இலந்தைகட்டி பாதாள ஞான
வடுகரூப வயிரவர்க்கு லாலி சுப லாலி

## எச்சரிக்கை

பழமறைகள் பொருள்தெரிய உரைப்பீர் எச்சரிக்கை
பண்ணோடு பலவிசைகள் பாடுவீர் எச்சரிக்கை
முழவாதி வாத்தியங்கள் முழக்குவீர் எச்சரிக்கை
முறையாகத் திருமுறைகள் ஓதுவீர் எச்சரிக்கை
விழவுபல ஐயனுக்கு எடுப்பீர் எச்சரிக்கை
விருப்புடனே ஆலயமும் நிர்வகிப்பீர் எச்சரிக்கை
அழகான வயிரவரைத் தொழுவீர் எச்சரிக்கை
அருளான பெருவாழ்வு பெறுவீர் எச்சரிக்கை

## மங்களம்

மலையுதவு மகள் தழுவு பரமசிவ னருளுருவ மாய்வந்த வடுகேச
வசமருளு மெனவடியர் தொழமணதி லிருளகல வருகுரவ திருமங்கலம்
தலைகுலவு நிலைகுலைய பிரமனொரு தலையரியு மதிநிர திருமங்களம்
தகுதிகெண நடனமிடு பூதகண மருகுவா தனிராச திருமங்களம்
அலையுதவு மகள் கணவனுரிதிகழ வழகொழுகு திருவுரு திருமங்களம்
அதிர்படைக ளெதிரவா பகைவர்மிக அலறியழ எதிர்வீர திருமங்களம்
இலைபொருவு திரிசூல கரமிலகு சயவீரகுணராச திருமங்களம்
எழாலை கீழ்த்திசையில் பாதாள ஞானகுரு வயிரவா திருமங்களம்

பாடல் யாத்தவர்:
சி. க. நாகலிங்கம்,
10ம் வட்டாரம்,
புங்குடுதீவு.

அச்சுப்பதிவு:
ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்,
நாவலப்பிட்டி.